## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
## தென் மாகாணம்

# தென் மாகாண கூட்டுறவுச் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் தரப்பினருக்கு விடுக்கப்படும் விசேட அறிவித்தல்

கூட்டுறவுச் சங்கச் சட்டம்/ தென் மாகாண கூட்டுறவுச் சங்க சாசனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தென் மாகாண கூட்டுறவுச் சங்க ஒழுங்குமுறையானது தென் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தென் மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் நிதிச் சேவை கூட்டுறவுச் சங்க ஒழுங்குபடுத்தல் குழுவின் இணக்கப்பாட்டின் பிரகாரம் தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள வங்கி ஒழுங்குபடுத்தல் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வைப்புகளுக்கான அதிகூடிய வட்டி விகிதாசார எல்லை தரப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக சில கூட்டுறவுச் சங்கங்களினால் முதலீடுகளைக் கவர்வதற்காகவும், அதனால் குறுகியகால நிதித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் கூடிய வட்டி விகிதாசாரத்தை வழங்கி அந்த சங்கங்கள் நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டுள்ளன.

அதனால் பின்வரும் வட்டி விகிதாசார எல்லைக்கு மேற்படும் முதலீடுகள் ஆபத்தானவை என்பதால் அது தொடர்பில் உங்களது கடுமையான கவனத்தைச் செலுத்தி கூட்டுறவுச் சங்கங்களில் நிதி முதலீடுகளை (பண வைப்பு) மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சாதாரண சேமிப்பு வைப்பு - 3.75%**
**(இந்த எல்லை 4.50% வீதத்தில் பேணிக்கொண்டு செல்லலாம்)**

**நிலையான வைப்பு - 8.50%**
**முதிர்ச்சிக் காலம் 01 வருடம் (12 மாதங்கள்)**
**(இந்த எல்லை 9.00% வீதத்தில் பேணிக்கொண்டு செல்லலாம்)**

தென் மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடுகளை மேற்கொள்ளும்போது (விசேடமாக பாரிய அளவிலான பண வைப்பின்போது) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கப் பதிவாளர்,**
**தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 147/3, பெட்டிகலவத்த, காலி.**

**தொ.பே. இல. : 091-2234380 தொலைநகல் : 091-2282291**
**காலி - 091-2234308 மாத்தறை - 041-2222329 ஹம்பாந்தோட்டை - 047-2256015**